ஹபிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 06 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழ்நாட்டின் சாலை உட்கட்டமைப்புக்கான மத்திய அரசின் நிதியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

**2.** கர்நாடக மாநில முதலமைச்சராக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. டி.கே. சிவகுமார் இன்று பதவியேற்கிறார்.

**3.** தமிழகத்தில் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

**4.** மக்களுக்கு பலனளிக்கக் கூடிய முந்தைய அரசின் திட்டங்கள் தொடரும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

**5.** தென்மேற்கு பருவமழை கேரளத்தில் நாளை தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டுக்கான சாலை மற்றும் உட்கட்டமைப்புகளுக்கான மத்திய அரசின் நிதி விடுவிப்பை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய அமைச்சரை, மாநில பொதுப்பணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனா சந்தித்து இதற்கான கோரிக்கையை வைத்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஆதவ் அர்ஜூனா, சாலைப் பாதுகாப்பு கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டில் விபத்துகளைக் குறைப்பது, முக்கிய உயர்மட்ட மேம்பாலங்களின் சீரமைப்பு மற்றும் நவீன திட்டமிடல்கள், நான்கு வழிச் சாலைகளை 6 வழிச் சாலைகளாக விரிவாக்கம் செய்வது உள்ளிட்ட 10 முக்கிய கோரிக்கைகளை மத்திய அமைச்சரிடம் வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சாலை விபத்து, மரணங்களைக் குறைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், வெளிப்படையான நிர்வாகத்தால் மாநிலத்தின் நெடுஞ்சாலைத்துறை

திட்டங்கள் முன்னெப்போதும் இல்லாத வளர்ச்சியை நோக்கி முன்னேறும் என்றும் திரு. ஆதவ் அர்ஜுனா அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

கர்நாடக மாநில புதிய முதலமைச்சராக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. டி.கே. சிவகுமார் இன்று பதவியேற்கிறார்.

கர்நாடக முதலமைச்சராக இருந்த திரு. சித்தராமையா பதவி விலகியதைத் தொடர்ந்து திரு. வி.கே. சிவகுமார், காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து பெங்களூருவில் உள்ள மக்கள் மாளிகையில் இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் அவருக்கு ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இதனிடையே பதவி விலகிய திரு. சித்தராமையாவை காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினராக அக்கட்சி நியமித்துள்ளது.

<<<<>>>>

தமிழக அரசின் பயிர்க்கடன் தள்ளுபடியால் 80 சதவீத குறு சிறு விவசாயிகள் பயனடைந்திருப்பதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொடர்ந்து விவசாயிகளின் நலனுக்கான திட்டங்களை அரசு எடுத்து வருவதாக கூறினார்.

மாநிலத்தின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு, தவெக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற குறைந்த நாட்களிலேயே மக்களுக்கு நலன் பயக்கக் கூடிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐந்து ஏக்கருக்கு குறைவான விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி என்ற அறிவிப்பால் பயனடைந்துள்ள விவசாயிகள் அரசுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிலையில் ஒருசிலரின் தூண்டுதலால் குறிப்பிட்ட விவசாய சங்கத்தினர் போராட்டம் நடத்தி வருவதாக திரு. நிர்மல் குமார் குறை கூறினார்.

<<<<>>>>

பணிநியமன ஆணை வழங்கியதில் நிதி முறைகேடு நடைபெற்றதாக கூறப்படும் வழக்கில் முன்னாள் அமைச்சர் திரு. கே.என். நேருவுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

முந்தைய திமுக ஆட்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சராக திரு. கே.என். நேரு இருந்தபோது அந்தத் துறையில்

பணி நியமனம் வழங்குவதற்காகவும், டெண்டர்கள் வழங்கவும் **10** கோடியே **20** லட்சம் ரூபாய் முறைகேடு நடைபெற்றிருப்பதாக புகார் எழுந்தது.

இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, வழக்குப்பதிவு செய்துள்ள அமலாக்கத்துறை, திரு. கே.என். நேரு வரும் **12**ஆம் தேதி நேரில் ஆஜராக கோரி சம்மன் வழங்கியுள்ளது.

<<<<>>>>

தேனி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் பள்ளிகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திரு. வைத்தியநாதன் ஆய்வு மேற்கொண்டார்.

மந்தைகுளம் ஏரி தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Rajkumar — 45 Sec)**

<<<<>>>>

தமிழக மக்களுக்கு நன்மை தரக்கூடிய முந்தைய அரசின் திட்டங்கள் தொடரும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இதழியல் கல்வி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அவர் பேசினார்.

ஆர்வமுள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு இதழியல் மற்றும் ஊடகவியல் துறைகளில் தரமான கல்வியை குறைந்த கட்டணத்தில் வழங்குவதே சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கம் என்று அவர் கூறினார்.

இதற்கான விதை முந்தைய ஆட்சியல் போடப்பட்டது என்றும், அதற்காக பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் திரு. ராஜ்மோகன் தெரிவித்தார்.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழை கேரளத்தில் நாளை தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மத்தியப்பிரதேசம் தொடங்கி, சத்திஸ்கட், விதர்பா வழியாக வட தமிழகம் வரை நீடிக்கும் வளிமண்டல சுழற்சி காரணமாக, நீலகிரி, கோவை, திருப்பூர் உள்பட தமிழகத்தின் 22 மாவட்டங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய

கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த ஒன்றாம் தேதி தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட பருவமழை சற்று தாமதமாக நாளை தொடங்கும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்காசி மாவட்டம் குற்றாலம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சாரல் மழையுடன் கூடிய குளிர்ச்சியான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Senthil — 44 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

இஸ்ரேல் - லெபனான் இடையே சண்டை நிறுத்தம் தொடர்பாக அதிகாரிகள் நிலையிலான நான்காவது சுற்று பேச்சுவார்த்தை வாஷிங்டனில் தொடங்கியது.

-------------

**வெனிசுலா தற்காலிக அதிபர் Delcy Rodriquez நான்கு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.**

**-------------**

**குடியுரிமை மற்றும் விசா விதிகளில் மத்திய அரசு மாற்றம் செய்துள்ளது.**

**-------------**

**பட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக மீனாட்சி மதன் ராயை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.**

**-------------**

**பாதுகாக்கப்பட்ட அகஸ்தியர் மலைப்பகுதியில் ஆக்கிரமிப்புகளை குறித்த காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை தமிழகம் மற்றும் கேரள அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

**-------------**

**UPI மூலம் மே மாதத்தில் 2 கோடியே 32 லட்சம் பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.**

**-------------**

**CBSE** விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக, அதிநவீன தொழில்நுட்ப சேவைகள் கொள்முதல் செய்ததில் நடைபெற்ற முறைகேடு குறித்து ஒருநபர் விசாரணை ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

-------------

ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஹுண்டாய் நிறுவனத்தில் நேரிட்ட தீ விபத்து குறித்து, அந்நிறுவன பிரதிநிதிகளுடன் மாநில அமைச்சர்கள் செல்வி கீர்த்தனா, திரு. தென்னரசு ஆகியோர் ஆலோசனை நடத்தினர்.

-------------

தமிழகத்தில் மேல்நிலை துணைத் தேர்வுகளுக்கு தட்கல் முறை சிறப்பு அனுமதி திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-------------

சென்னை கோட்டூர்புரம், செம்பியம் உட்பட 11 காவல்நிலைய ஆய்வாளர்களை இடமாற்றம் செய்து மாநகர காவல் ஆணையர் திரு. அமல்ராஜ் உத்தரவிட்டுள்ளார்.

-------------

அரக்கோணம் ரயில் நிலைய பணிமனையில் பராமரிப்பு பணிகளை முன்னிட்டு இன்று முதல் வரும் 5ஆம் தேதி வரை புறநகர் ரயில் சேவைகளில் செய்யப்பட இருந்த மாற்றங்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான 3வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

இங்கிலாந்தின் Taunton-ல் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்தது.

181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 184 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து **2-1** என்ற கணக்கில் தொடரை வென்றது.

**<<<<The End>>>>**